**மே – 01**

# TNPSC துளிகள்

- ஷாங்காய் கூட்டுறவு நிறுவத்தின் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் மாநாட்டில் பங்கேற்பதற்காக வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் சீனாவிற்கு சென்றுள்ளார். கடந்த மாதம் திரு. வாங் சீனாவின் கவுன்சிலராக பதவி உயர்வு பெற்ற பிறகு நடைபெறும் முதல் மாநாடு இதுவேயாகும். இப்பதவி உயர்வு, சீன அரசு அதிகாரப் பதவிப் படிநிலைகளில் நாட்டின் உயர் தூதரக அதிகாரியாக வாங்கை உருவாக்கியுள்ளது. இவர் வெளியுறவு அமைச்சராகவும் தனது பதவியைத் தொடர்வார்.
- துருக்கி குடியரசிற்கான இந்தியாவின் தற்போதைய தூதரான திரு.இராகுல் குல்ஸ்ரேஸ்த், எகிப்து அரபுக் குடியரசிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- எகிப்து அரபுக் குடியரசிற்கான இந்தியாவின் தற்போதைய தூதரான திரு. சஞ்சய் பட்டாச்சார்யா துருக்கி குடியரசிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தற்போது பனாமாவிற்கான இந்திய தூதராக பணியாற்றி வரும் திரு. இரவி தாப்பர் (IFS : 1983) நிகரகுவாவிற்கான அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இரு பணியையும் ஒருசேர மேற்கொள்வார்.
- நாட்டின் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப அவுட்சோர்சிங் நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் $100 பில்லியன் டாலர் அளவிலான சந்தை மூலதனத்தை அடைந்த முதல் இந்திய நிறுவனமாக உருவெடுத்து வரலாற்று சாதனை படைத்துள்ளது. சந்தை மூலதன மதிப்பு என்பது நிறுவனங்களின் மதிப்பு ஆகும். இந்த மதிப்பு ஆனது, பங்குச் சந்தையில் வர்த்தகம் செய்யப்படுகிறது. தற்போதைய பங்குகளின் விலைப்படி மொத்த பங்குகளை பெருக்கி இந்த மதிப்பு கணக்கிடப்படுகிறது.
- மகாத்மா காந்தியின் 1917ஆம் ஆண்டின் சம்பாரான் இயக்கத்தின் அடிப்படையில் பீகார் முதலமைச்சர் நிதிஸ் குமார் மூன்று புத்தகங்களை வெளியிட்டுள்ளார்.

  அவையாவன:

| புத்தகங்கள் | எழுதியவர்கள் |
|---|---|
| `மிஸ்டர் M.K.காந்தி கி சம்பாரன் டைரி’ | அரவிந்த் மோகன் |
| `சம்பாரன் அந்தோலன் 1917’ | அசுடோஷ் பர்தேஷ்வர் |
| `பீர் முகம்மது முனிஸ்: கலம்கா சத்யாகிரகி’ | ஸ்ரீகாந்த் |

- எகிப்து வீரரான முகம்மது சாலாஹ், லிவர் பூலில் நடைபெற்ற தன்னுடைய முதல் போட்டியில் சிறப்பாக விளையாடியமைக்காக மத்திய லண்டனிலுள்ள குரோஸ் வெனோர் ஹவுஸ் ஹோட்டலில் நடைபெற்ற 45-வது PFA விருது வழங்கும் விழாவில் இந்த ஆண்டிற்கான தொழில்முறை கால்பந்து வீரர்கள் கூட்டமைப்பு வீரர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அயன் ரூசுக்குப் பிறகு 40 கோல்களை ஒரே தொடரில் அடித்த முதல் லிவர் பூல் வீரரான இவர், பிரிமீயர் லீக் கால்பந்துப் போட்டியில் லூயி சர்வேஷ் அடித்த 31 கோல்கள் என்ற சாதனையை வீழ்த்திய பெருமையையும் பெற்றுள்ளார்.

- நாட்டுடைமை வர்த்தக நிறுவனமான MMTC மூலமாக +64% Fe தரத்திலான இரும்புத் தாதுக்களை (திரட்டுக்கள்) ஜப்பான் மற்றும் தென்கொரியாவிற்கு அடுத்த ஐந்தாண்டுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நீண்ட கால ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கு மத்திய கேபினெட் அனுமதி வழங்கியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## நகர்ப்புற மேம்பாடு; தொழில்நுட்ப தீர்வுகள் மற்றும் ஆளுகைச் சவால்கள்

- நகர்ப்புற மேம்பாடு; தொழில்நுட்ப தீர்வுகள் மற்றும் ஆளுகைச் சவால்கள் (Urban Development: Technological Solutions and Governance Challenges) மீதான இருநாள் பிராந்திய மாநாடு அண்மையில் குஜராத் மாநிலத்தின் அஹமதாபாத்தில் நடைபெற்றது.
- மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்ற வளரும் நாடுகளுக்கான ஆராய்ச்சி மற்றும் தகவல் அமைப்பு (Information System for Developing Countries -RIS), ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (Asian Infrastructure Investment Bank - AIIB), ASSOCHAM ஆகியவற்றுடன் கூட்டிணைந்து மத்திய நிதி அமைச்சகம் இம்மாநாட்டை ஒருங்கிணைத்துள்ளது.
- இம்மாநாடானது மும்பையில் 2018-ஆம் ஆண்டு ஜூன் 25 மற்றும் 26 ஆம் தேதியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள ஆசிய முதலீட்டு வங்கியின் 3-வது வருடாந்திர சந்திப்பிற்கான 3-வது வழிநடத்து (lead-up event) நிகழ்ச்சியாகும்.
- இந்த மூன்றாவது மாநாட்டிற்கு முன்பு, இதன் இரு பிராந்திய மாநாடுகளானது கொல்கத்தா மற்றும் விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது.
- வெகுஜன விரைவு போக்குவரத்து அமைப்பு (Mass Rapid Transport Systems) எனும் கருப்பொருளில் கொல்கத்தாவிலும், துறைமுகம் மற்றும் கடலோர உள்கட்டமைப்பு (Port and Coastal Infrastructure) எனும் கருப்பொருளில் விசாகப்பட்டினத்திலும் முறையே முதல் மற்றும் இரண்டாம் பிராந்திய மாநாடுகள் நடத்தப்பட்டன.
- மொத்தமாக இதுவரை நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இது போன்று எட்டு பிராந்திய மாநாடுகள் நடைபெற்றுள்ளன.

## இந்தியா - தென்னாப்பிரிக்கா வணிக மாநாடு

- முதல் இந்தியா - தென் ஆப்பிரிக்கா வணிக மாநாடானது தென்னாப்பிரிக்க நாட்டின் ஜோகன்னஸ்பர்க்கில் உள்ள சண்ட்டோன் மையத்தில் நடைபெறவுள்ளது.
- மரபின் மூலம் ஒன்றிணைந்துள்ளோம், செழுமைக்காக ஒருங்கிணைந்துள்ளோம் - இரு நாடுகளின் பகிரப்பட்ட வரலாறுகளை பிரதிபலித்தல் (United by Legacy, Unified for Prosperity - reflecting the shared histories of the two countries) என்ற கருப்பொருளில் இந்த மாநாடு நடைபெற உள்ளது.
- மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம், முதலீடு இந்தியா அமைப்பு,



கௌடெங் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (Gauteng Growth and Development Agency), இந்திய தொழிற்சங்க கூட்டமைப்பு (of Indian Industry-CII) ஆகியவற்றுடனான கூட்டிணைவோடு இணைந்து இந்திய உயர் ஆணையம் (high commission of India) இந்த மாநாட்டை நடத்தவுள்ளது.

- இந்தியா மற்றும் தென்னாப்பிரிக்காவிற்கு இடையேயான 25-வது வருட இராஜ்ஜிய ரீதியான உறவுகளின் தொடக்கத்தில் இந்தியா அல்லது தென்னாப்பிரிக்காவில் வணிக மாநாடு நடைபெற உள்ளது இதுவே முதன்முறையாகும்.

## உலக வர்த்தக மையம் - தில்லி

- டெய்பி உலக வர்த்தக மையமானது (Taipei World Trade Centre -TWTC) புது தில்லியில் தன்னுடைய அலுவலகத்தை தொடங்கியுள்ளது.
- வர்த்தகத்தில் உள்ள நவீன தொழில்நுட்பங்களையும், பொலிவுறு நகரங்களின் தீர்வைகளையும் காட்சிப்படுத்த உள்ள தைவானின் முதல் கண்காட்சிக்கு முன் கூட்டியே இந்த வர்த்தக மையம் டெல்லியில் தொடங்கப்பட்டுள்ளது
- தைவானில் வர்த்தக மேம்பாட்டிற்கான முதன்மை அரசு அமைப்பான தைவான் அரசாங்கத்தின் தைவான் வெளிநாட்டு வர்த்தக மேம்பாட்டுக் கழகம் (Taiwan External Trade Development Council-TAITRA) இந்த அலுவலகத்தை புதுதில்லியில் அமைக்க ஏற்கனவே முன்மொழிவை வழங்கியிருந்தது.
- இந்தியா மற்றும் தைவானிற்கு இடையேயான இரு தரப்பு வர்த்தகத்தை அதிகரிப்பதற்காக இந்த அலுவலகம் துவங்கப்பட்டுள்ளது.
- இந்தியா மற்றும் தைவானிற்கு இடையேயான இரு தரப்பு வர்த்தகம் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6.3 பில்லியன் டாலர்களாக அதிகரித்துள்ளது.

## ஐக்கியப் பேரரசு - இந்தியா தொழில்நுட்ப கூட்டணி

- இந்தியாவிலும் ஐக்கியப் பேரரசிலும் உள்ள முன்னணி தொழில்நுட்ப வர்த்தக அமைப்புகளான நாஸ்காம் மற்றும் டெக்-யுகே அமைப்புகள், பிரதமரின் ஐக்கியப் பேரரசின் வருகையின் போது, புதிய ஐக்கியப் பேரரசு -இந்தியா தொழில்நுட்ப கூட்டணி" என்ற முயற்சியை வெளியிட்டுள்ளன.
- இக்கூட்டணி, ஐக்கியப் பேரரசால் ஏற்படுத்தப்பட்ட துறை தாண்டிய டிஜிட்டல் திறமைகள் கூட்டுப் பங்களிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஐக்கியப் பேரரசில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்திய நிறுவனங்கள் டிஜிட்டல் திறன் பயிற்சி வாய்ப்புகளை ஏற்படுத்திட ஊக்குவிக்கின்றது.

## இந்தியாவிற்கு நன்றி

- மார்ச் 31 ஆம் தேதியன்று, தர்மசாலாவில் உள்ள மத்திய திபெத்திய நிர்வாகம், நாடு கடந்த திபெத்தியர்களுக்கு அறுபது வருடங்களாக கருணையுற்ற நாடாக இந்தியா இருப்பதற்கு நன்றி தெரிவிக்கும் வகையிலான நிகழ்ச்சிகளை நடத்தியது.
- இந்த நிகழ்ச்சி, தலாய் லாமாவின் இந்திய வருகையின் 60-வது ஆண்டு தினத்தை நினைவு கூறும் நிகழ்ச்சியாகும்.

## ஒரே சமயத்திலான தேர்தல்கள்

- சட்ட ஆணையத்தால் வெளியிடப்பட்ட வரைவு வெள்ளை அறிக்கையானது மக்களவைக்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் 2019 ஆம் ஆண்டில், ஒரே சமயத்தில் தேர்தல்களை நடத்திட பரிந்துரை செய்துள்ளது.
- இந்த நோக்கம் நிறைவேறிட அரசியலமைப்பை திருத்திடவும் இது பரிந்துரை செய்கின்றது.
- இந்த ஆணையம் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி B.S. சௌஹான் தலைமையில் அமைந்திருக்கின்றது.

*முக்கியப் பரிந்துரைகள்:*

- ஒரே சமயத்திலான தேர்தல்கள், சுதந்திரத்திற்கு பிறகிலிருந்து 1967 வரையிலான முதல் இருபது ஆண்டுகளில் நடத்தப்பட்டன என ஆணையம் கூறுகின்றது.
- வெள்ளை அறிக்கையானது, அரசியலமைப்பு, 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் மக்களவை, மாநில சட்டமன்றங்கள் ஆகியவற்றின் நடைமுறை விதிகள் ஆகியவற்றை திருத்துவதன் மூலம் ஒரே சமயத்திலான தேர்தல்களை நடத்த முடியும் என பரிந்துரை செய்கின்றது.
- இந்தக் குழுவானது, இடைக்கால தேர்தல்கள் நடத்தப்படுமேயானால் புதிய மக்களவை அல்லது சட்டப் பேரவைகள் ஏற்கனவே உள்ள மக்களவை அல்லது சட்டப் பேரவைகளின் எஞ்சியுள்ள காலத்திற்கு மட்டும் ஏற்படுத்தப்படுமென்றும், புதிய ஐந்து வருடங்களுக்கு ஏற்படுத்தப்படமாட்டாது என்றும் கூறுகின்றது.
- மேலும் இவ்வறிக்கை பிரதமர் அல்லது முதல்வர், சபாநாயகர் போன்று சபையின் முழுக் காலத்திற்கும் தலைமை வகிக்கும் முறையில் ஒட்டு மொத்த அவையால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் கூறுகின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## காமன்வெல்த் தலைமை

- காமன்வெல்த் கூட்டமைப்பில் (Commonwealth organization) உள்ள காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் இங்கிலாந்து அரசியான எலிசபெத்திற்குப் பிறகு காமன்வெல்த் கூட்டமைப்பின் அடுத்த தலைவராக பிரிட்டன் இளவரசர் சார்லஸை ஏற்றுக் கொள்ள ஒத்துக் கொண்டுள்ளனர்.
- இங்கிலாந்தில் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் அரசுத் தலைவர்கள் சந்திப்பில் (Commonwealth Heads of Government Meeting) கலந்துகொண்ட அரசுத் தலைவர்களால் இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.
- மறைந்த தன் தந்தை ஆறாம் ஜார்ஜிடம் (George VI) இருந்து காமன்வெல்த் அமைப்பின் தலைவர் பொறுப்பைப் பெற்ற இங்கிலாந்து அரசியான எலிசபெத் ராணி 1952-ஆம் ஆண்டிலிருந்து காமன்வெல்த் அமைப்பின் தலைவராக உள்ளார்.
- இருப்பினும் காமன்வெல்த் அமைப்பின் தலைவர் பதவி பரம்பரை மரபுவழிப் பட்டதல்ல (hereditary). காமன்வெல்த் கூட்டமைப்பின் தலைவரை தேர்ந்தெடுப்பது இக்கூட்டமைப்பில் உள்ள 53 நாடுகளின் தலைவர்களைப் பொறுத்ததாகும்.

- காமன்வெல்த் கூட்டமைப்பில் 53 நாடுகள் உள்ளன. பெரும்பாலும் இவை பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டிருந்த முன்னாள் காலனியப் பகுதிகளாகும்.
- இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை காமன்வெல்த் தலைவர்கள் மாநாடு நடத்தப்படுகின்றது.

## கியூபாவின் புதிய அதிபர்

- கியூபா நாட்டின் அதிபராக மிகுயெல் டையஸ்-கேனெல் (Miguel Díaz-Canel) அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.
- அண்மையில் கியூபாவின் தேசியப் பேரவையில் (National Assembly) அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான இரகசிய வாக்கெடுப்பு நடைபெற்றது.



- அண்மையிலான 60 ஆண்டுகளில், கேஸ்ட்ரோ (Castro) எனும் பெயரில்லாத ஒருவரால் கியூபா வழிநடத்தப்படுவது இதுவே முதன் முறையாகும்.
- 2006-ஆம் ஆண்டு கியூபாவின் அதிபராக பதவியேற்ற ரவூல் கேஸ்ட்ரோவினை (Raul Castro) பதில் மாற்றம் செய்ய தற்போது கியூபாவின் முதல் துணை அதிபரான மிகுயெல் டையஸ்-கேனெல் கியூபா தேசியப் பேரவையால் கியூபாவின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இருப்பினும் ரவூல் கேஸ்ட்ரோ கியூபாவினுடைய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் செயலாளராகவும், கியூபாவின் தேசிய அவை உறுப்பினராகவும் தொடர்வார்.
- கியூபாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகவும், கியூபா அரசினுடைய தலைவராகவும் இருவேறு நபர்கள் இருப்பது கியூபாவில் இதுவே முதன் முறையாகும்.

## பெரும் பொருளியல் கொள்கைகள் கண்காணிப்புப் பட்டியல்

- அமெரிக்க கருவூலத் துறையானது, தனது முக்கிய வர்த்தகப் பங்காளிகளை கண்காணிக்கும் பட்டியலில் இந்தியாவை சேர்த்துள்ளது.
- இந்த சேர்ப்பு அவர்களது நாணய பழக்க வழக்கங்களையும் பெரும் பொருளியல் கோட்பாடுகளையும் கண்காணித்திட உதவும்.
- இந்த பட்டியலானது அமெரிக்காவின் முக்கிய வர்த்தகப் பங்களிப்பு நாடுகளின் கொள்கைகள் மீதான அரையாண்டு அறிக்கையின் ஒரு பகுதியாகும்.
- அமெரிக்கக் கருவூலத் துறையானது தமது வர்த்தக நலன்களுக்காக எந்தெந்த நாடுகள் செயற்கையாக தங்களது நாணயத்தின் மதிப்பை மாற்றுகின்றன என்பதைக் கண்டுபிடித்து காங்கிரசுக்கு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.
- இது ஏமாற்று நாணய கையாளுகையை கண்டுபிடித்திட மூன்று அளவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன
  - இருபது பில்லியன் டாலர் அளவிற்கு அமெரிக்காவுடனான இருதரப்பு வர்த்தகம்

- அந்நாட்டின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவிகிதம்.
- ஒரு வருடத்தில் அந்நிய நாணயங்களின் நிகர கொள்முதல் அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 சதவிகிதம்.

❖ இந்தியா, இந்தப் பட்டியலில் சீனா, ஜப்பான், தென் கொரியா, ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்குப் பிறகு சேர்க்கப்பட்ட ஆறாவது நாடாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## தலைமறைவான பொருளாதார குற்றவாளிகள் அவசரச் சட்டம் 2018

❖ வங்கிகளில் கடன் பெற்று திரும்ப செலுத்தாமல் வெளிநாடுகளுக்கு தப்பியோடிய பொருளாதார குற்றவாளிகளின் சொத்துகளை பறிமுதல் செய்ய வழிவகுக்கும் 2018-ஆம் ஆண்டின் தப்பியோடிய தலைமறைவு பொருளாதார குற்றவாளிகள் அவசரச் சட்டத்தின் (Fugitive Economic Offenders Ordinance 2018) பிரகடனத்திற்கான முன்மொழிவிற்கு மத்திய கேபினேட் அனுமதி வழங்கியுள்ளது.

❖ இத்தகு பொருளாதார குற்றவாளிகள் பண மோசடி தடுப்புச் சட்டத்தின் (Prevention of Money Laundering Act - PMLA) கீழ் விசாரணை செய்யப்படுவர்.

❖ கடன் பெற்று மோசடி செய்து வெளிநாட்டிற்கு தப்பியோடியவர்களின் சொத்துகளை அவர்களுடைய குற்றத்திற்கான தண்டனை வழங்காமலேயே (without conviction) பறிமுதல் செய்யவும் அத்தகு சொத்துகளை விற்பதன் மூலம் கடன் கொடுத்தவர்களுக்கு திரும்ப கடன் தொகையை செலுத்துவதற்கும் இந்த அவசரச் சட்டம் வழி வகுக்கின்றது.

❖ இந்த அவசரச் சட்டத்தின்படி, 2002 ஆம் ஆண்டின் பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்ட இயக்குநர் அல்லது துணை இயக்குநர் வங்கியில் கடன் பெற்று திரும்ப செலுத்தாத நபரை / தப்பித்து ஒடியவரை தலைமறைவான பொருளாதார குற்றவாளியாக (fugitive economic offender) அறிவிக்க பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம்.

❖ இந்த சிறப்பு நீதிமன்றத்தின் ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீட்டை உயர் நீதிமன்றத்தில் மேற்கொள்ளலாம்.

# மாநிலச் செய்திகள்

## திரைப்படத்துறைக்கு மிகுந்த நட்பு மாநிலம்

❖ மத்திய அரசால் வழங்கப்படும் திரைப்படத் துறைக்கு மிகுந்த நட்பு மாநிலம் என்ற விருதை மத்தியப் பிரதேசம் வென்றுள்ளது.

❖ இந்த விருதானது சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட இணைய தளத்தை உருவாக்குதல், திரைப்படத்துறைக்கு உதவிடும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் படப்பதிவு செய்தலை மாநிலத்தில் எளிமையாக்கிய முயற்சிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

❖ இந்த விருது ஏற்கனவே குஜராத் மற்றும் உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு

வழங்கப்பட்டுள்ளது.

- படப்பதிவு மேற்கொள்ளும் சூழலை எளிதாக்கிட மேற்கொண்ட முயற்சிகளை பாராட்டும் விதமாக உத்தரகாண்ட் மாநிலத்திற்கு சிறப்பு குறிப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

- - - - - - - - - - - - - - -